இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 180 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 27 – ஞாயிற்றுக்கிழமை 09 பிப்ரவரி 2025 – வெளியூர் 12+8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 180 : Thiruvalluvar Year - 2056 - Thai 27 - Sunday 09 February 2025 - Dak 12+8 Pages ₹ 5.00

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு மக்கள் தொடர்ந்து அங்கீகாரம்!

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் மகத்தான முன்னணி!

## கழகத் தோழர்கள் மகிழ்ச்சி, ஆரவாரம், கொண்டாட்டம்!

**ஈரோடு, பிப்.9 -**

**ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் வி.சி. சந்திர குமார் மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னணி பெற்றுள் ளார். இதனைக் கண்டு கழகத் தோழர் கள் மகிழ்ச்சி, ஆரவாரம் செய்து கழகத்தினர் வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வி.சி.சந்திரகுமார், தம்மை எதிர்த்துப் போட்டி யிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளரைவிட பல்லாயிரக்கணக்கான வாக்குகள் கூடுதலாகப் பெற்று வாகை சூடினார்.

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகு திக்கான இடைத்தேர்தலை கடந்த ஜனவரி 7ம் தேதி தேர்தல் ஆணை யம் அறிவித்தது. இந்தத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வி.சி. சந்திர குமார் உள்ளிட்ட 46 பேர் போட்டி யிட்டனர்.

இந்த தேர்தலில் ஆண் வாக்காளர் கள் 1 லட்சத்து 10 ஆயிரத்து 128 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 17 ஆயிரத்து 381 பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37



பேரும் என மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்களிக்க 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டி ருந்தன.

வாக்குப்பதிவு 5.2.2025 அன்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது.

இதில் 67.97 சதவீதம் வாக்குகள் பதிவாகின. வாக்குப்பதிவு நிறை வடைந்ததும், வாக்குப் பெட்டிகள் அர சியல் கட்சியின் வாக்குச்சாவடி முக வர்களின் முன்னிலையில் சீல் வைக் கப்பட்டன.

ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம், போலீஸ் பாது காப்புடன் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோட்டில் உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூ ரிக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. வாக்கு எண்ணிக்கை மையத்தில், 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்கா ணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட் டது. முதல் அடுக்கில் ஸ்ட்ராங் ரூம் பகுதியைச் சுற்றியும் மத்திய தொழிற்பாதுகாப்புப் படையினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலியன் போலீசார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப்படை போலீசார், நான்காம் அடுக்கில் லோக்கல் போலீ சாரும் 24 மணி நேரமும் 3 ஷிப்ட் முறையில் 400க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

வாக்கு எண்ணிக்கை நேற்று (8ஆம் தேதி) காலை 8 மணிக்கு தொடங்கியது. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 14 மேஜைகளில் எண் ணப்பட்டன.

தொடக்கம் முதலே கழக வேட்பா ளர் வி.சி.சந்திரகுமார், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளரை விட ஆயிரக் கணக்கான வாக்குகள் வித்தியா சத்தில் முன்னிலை பெற்று விளங்கினார்.

சுற்றுகள் வாரியாக பெற்ற வாக்குகள் விபரம் வருமாறு:-

**முதல் சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 7,837

நாம் தமிழர் - 1,081

**இரண்டாவது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 15,949

நாம் தமிழர் - 2,328

**3வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 22,682

நாம் தமிழர் - 4,030

**4வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 30,657

நாம் தமிழர் - 6,014

**5வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 36,880

நாம் தமிழர் - 7,668

**6வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 43,427

நாம் தமிழர் - 9,152

**7வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 49,251

நாம் தமிழர் - 10,587

**8வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 55,849

நாம் தமிழர் - 12,028

**9வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 61,683

நாம் தமிழர் - 13,443

**10வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 69,723

நாம் தமிழர் - 15,008

**11வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 76,278

நாம் தமிழர் - 16,547

**12வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 88,191

நாம் தமிழர் - 17,679

**13வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 89,931

நாம் தமிழர் - 19,078

**14வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 96,450

நாம் தமிழர் - 20,384

**15வது சுற்று**

சந்திரகுமார் (தி.மு.க.) - 1,01,303

நாம் தமிழர் - 21,110

**கழக வேட்பாளர் கூடுதலாகப் பெற்ற வாக்குகள் வித்தியாசம் - 80,193.**

---

### மாநில அரசு எப்படித்தான் செயல்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்?

# தமிழ்நாடு ஆளுநர் அரசியலமைப்பை நீர்த்துப் போகச் செய்வதா?

## உச்சநீதிமன்ற நீதிபதிகள் கடும் கண்டனம்!

**புதுடெல்லி, பிப். 9 -**

**தமிழக அரசின் மசோதாக்களை கிடப்பில் போட்ட விவகாரத்தில் அரசின் செயல்பாடுகளுக்கு ஆளுநர் முட்டுக்கட்டையாக இருக்க கூடாது; அவ்வாறு இருக்கவும் முடியாது என உச்சநீதிமன்ற நீதிபதிகள் உறுதிபட தெரிவித்துள்ளனர்.**

தமிழக அரசின் பல்வேறு மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் அமர் வில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆளுநர் தரப்பில் மத்திய அரசின் அட்டர்னி ஜெனரல் ஆர்.வெங்கடரமணி ஆஜரானார். அவரிடம் நீதிபதிகள், “தமிழக அரசு நிறைவேற்றி அனுப்பிய 12 மசோதாக்களில் இரண்டை மட்டும் குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் பரிந்துரை செய்தது ஏன்? எஞ்சிய 10 மசோதாக்களை 3 ஆண்டுகளாக கிடப்பில் போட்டது ஏன்? இதுதொடர் பாக ஆளுநர் தரப்பில் ஆதாரப்பூர்வ மாக விளக்கவேண்டும்” என உத்தரவிட்டனர்.

அதன்படி, இதே அமர்வில் இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

**ஆளுநர் தரப்பில் அட்டர்னி ஜெனரல் வெங்கடரமணி: -**

துணைவேந்தர் நியமனத்தில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள நடைமுறை மத்திய சட்டத்துக்கும், அதன் விதிமுறைகளுக்கும் எதிராக இருக்கும்போது, அதற்கு ஆளுநர் எப்படி ஒப்புதல் அளிப்பார்? பல்கலைக் கழகங்களின் செயல்பாடுகுறித்து ஆலோசிக்க துணைவேந்தர்களின் மாநாட்டை ஆளுநர் கூட்டியபோது, அதில் பங்கேற்க கூடாது என துணை



வேந்தர்களிடம் தமிழக அரசு கூறு கிறது. யுஜிசி விதிகளுக்கு கட்டுப்பட்டு செயல்படும் துணைவேந்தர்களின் பொறுப்பை ஆக்கிரமிக்க மாநில அரசு முயற்சிக்கிறது.

**நீதிபதிகள்:** பல்கலைக்கழக மசோதா, மத்திய சட்டத்துக்கு எதிராக இருந்தால் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன? மாநில அரசு எப்படித்தான் செயல்பட வேண்டும் என நினைக் கிறீர்கள்? மாநில அரசின் செயல்பாடு களுக்கு ஆளுநர் முட்டுக்கட்டை யாக இருக்க கூடாது; இருக்கவும் முடியாது. அந்த முட்டுக்கட்டையை நீக்க வேண்டும். ஆளுநர் எதுவுமே கூறாமல் மசோதாக்களை கிடப்பில் போட்டால், அவர் மனதில் இருப்பது அரசுக்கு எப்படி தெரியும்? ‘நான் ஒப்புதல் தராமல் மசோதாக்களை தடுத்து நிறுத்துகிறேன். மறுபரிசீ லனை செய்யுமாறு உங்களை (மாநில அரசை) கேட்கமாட்டேன்’ என ஆளுநர் கூறினால் அதில் என்ன அர்த்தம் உள்ளது?

இதன் மூலம் அரசியலமைப்பு சட்டத்தின் 200வது பிரிவின் இரண்டாம் பகுதியை ஆளுநர் நீர்த்துப்போக செய்துள்ளார். அவர் தனக்கென ஒரு பாணியை அமைத் துக் கொண்டதாகவே தெரிகிறது. ஆளுநர் இதுதொடர்பாக அரசின் கவனத்தை ஈர்த்திருக்கலாம். அல்லது இந்தந்த மசோதாக்களை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என கூறியிருக்கலாம். மசோதாக்களை கிடப்பில் போட்டு தீங்கு இழைத்துள்ளீர்கள்.

இந்த விவகாரத்தில் தமிழக அரசின் மசோதாக்களில் ஆளுநர் கண்டறிந்த ஓட்டைகள்தான் என்ன? எதற்காக மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க மறுத்தார் என்பதற்கான காரணத்தை காட்ட வேண்டும். குடியரசுத் தலைவருக்கு மசோதாக் களை பரிந்துரைக்கும்போது ஆளுநர் என்ன காரணம் கூறி யுள்ளார். எந்த காரணத்தையும் கூறாமல் பரிந்துரை செய்திருந்தால் குடியரசுத் தலைவரே கேட்டு தெரிந்து கொள்வாரா?

ஆளுநர் தரப்பு: ஆளுநரிடம் அல் லது குடியரசுத் தலைவரிடம் ஒரு மசோதா நிலுவையில் இருக்கும் போது அது சட்டப்பேரவையில் காலாவதி ஆகாது. எனவேதான் அது தொடர்பாக ஆளுநர் முடிவெடுக்க அரசியல் சாசனத்தில் கால நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை.

**நீதிபதிகள்:** உங்கள் வாதப்படியே மசோதாக்களை நிறுத்தி வைப்பதாக இருந்தால் பல்கலைக்கழகங்களின் நிலைமை என்ன ஆவது. துணை வேந்தர்களை நியமிக்காவிட்டால் மாணவர்களின் எதிர்காலம், கல்வித் தரம் என்ன ஆகும். ஒரு மசோதா சரியானது அல்ல என கருதினால் ஒரேயடியாக நிராகரிக்கலாமே. அதைவிடுத்து நிறுத்தி வைப்பது ஏன்? அரசியல் சாசன பிரிவுகள் 200, 201ன் சட்ட விதிகளின்படி அட்டர்னி ஜெனரல் விளக்கம் அளிக்க வேண்டும். இறுதி விசாரணை நாளை (பிப்ரவரி10ம் தேதி) நடை பெறும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட் டுள்ளனர்.